10.3.2026

<u>அ.வ.எண்.12/2008</u>

வா.சா.1 சுந்தரம் த/பெ. குள்ளுபடையாச்சி

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.38 மற்றும் 39 ஆவணங்கள் சந்திரசேகரபுரம் கூட்டுறவு வங்கியில் கடன் பெறுவதற்காக வழங்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், எனது தகப்பனார் மற்றும் எனது சகோதரரான 2ம் பிரதிவாதியும் ஒரே இடத்தில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனது தந்தையான முதல் பிரதிவாதி இந்த வழக்கில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி இருந்தார் என்றால் சரிதான். அவர் 2009ம் ஆண்டு இறந்து விட்டார். அவர் இறக்கும் வரை இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2ம் பிரதிவாதி திருமணம் ஆகாமல் என்னுடன் இருக்கிறார் என்றால் அவர் தனியாக இருக்கிறார். நானும், 2ம் பிரதிவாதியும் ஒரே வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா பிராதில் என்னுடைய முகவரியும், 2ம் பிரதிவாதியின் முகவரியும் ஒரே விலாசம் என்றால் சரிதான். அவர் தனியாக இருக்கிறார். 3ம் பிரதிவாதியின் கணவர் முத்துசாமி 1994ம் ஆண்டு சொத்தை கிரயம் பெற்று 1997ம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் அவர் 1996ம் ஆண்டு இறந்து விட்டார். அவர் இறக்கும் வரை தாவா சொத்தை பொறுத்து பிரிவினை எதுவும் கேட்கவில்லை. சொத்தில் உரிமை இல்லை என்பதால் தான் அவரிடம் நான் கேட்கவில்லை என்றும், அவர் இறந்த பின்னர் அவரது வாரிசுகளிடம் தற்போது கேட்கிறேன் என்றால் சரியல்ல.

முத்துசாமி சொத்தை கிரயம் பெற்ற பின்னர் அவர் பட்டா மாறுதலுக்கு மனு கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் கிரயம் வாங்கிய பின்னர் அவர் பட்டா பெயர் மாற்றம் செய்து கொண்டார். அவருக்கு வழங்கப்பட்ட பட்டா பெயர் மாற்ற உத்தரவில் சிட்டா எனது பெயரில் இருந்தாலும், பழைய கிராம கணக்குகளில் பெரிய ஆறுமுகபடையாச்சி மகன் நடுப்பையன் (என்கிற) ஆறுமுகத்தின் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்ததால் பெயர் மாற்றம் முத்துசாமி பெயருக்கு மாற்றப்படுகிறது என்று உத்திரவிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, அது தவறாகும். அந்த உத்திரவிற்கு எதிராக நான் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் பட்டா வழங்கவதற்கு முன்பு நான் கொடுக்கக்கூடாது என்று ஆட்சேபித்துள்ளேன். அதற்கான ஆவணம் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

என்னுடைய பிரமாண வாக்கு மூலம் பக்கம் எண்.3ல் பழனி படையாச்சி மகன் ஆறுமுகம் மற்றும் சின்னதம்பி மகன் முத்துசாமி மற்றும் சிலர் முன்னிலையில் பஞ்சாயத்து வைத்து கேட்டதில் ஆரம்பத்தில் 1,2 பிரதிவாதிகளும் காலஞ்சென்ற முத்துசாமியும் பாக பிரிவினைக்கு சம்மதித்துவிட்டு அதை சாக்குபோக்கு சொவல்லி பாகம் பிரிப்பதை தள்ளி வைத்துக்கொண்டே போனார்கள் என்பதை என்னுடைய வழக்கு பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கில் எதற்காக 9 மற்றும் 10ம் பிரதிவாதிகளை சேர்த்துள்ளேன் என்றால் 9ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் மாமா ஆவார். அவர் சொத்தை விற்பனை செய்வதற்காக அவர் பெயரில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் அதற்காக அவரை சேர்த்துள்ளேன். 9ம் பிரதிவாதி

பெயரில் ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. 10ம் பிரதிவாதி எந்த நிலமும் வாங்கவில்லை. 9ம் பிரதிவாதி பெயரில் உள்ள எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை.

என்னுடைய பிரமாண வாக்கு மூலம் பத்தி எண்.11ல் சொல்லியுள்ள விவரங்களை என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்கு மூலம் பத்தி எண்.15ல் சொல்லியுள்ள விவரங்களை என்னுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய தகப்பனார் ஆராயி என்பவரை திருமணம்செய்தபோது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். அவர்களுக்குள் எவ்வாறு எப்படி திருமணம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

என்னுடைய பிரமாண வாக்கு மூலம் பத்தி எண்.19ல் எனது தந்தை 7.3.2007ம் தேதியில் உயில் எழுதி வைத்துள்ளார் என்ற விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை. உயிலில் உள்ள வாசகங்கள் நானும், எனது சகோதரரும் முத்துசாமியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நாங்களாக ஏற்படுத்திக் கொண்டது என்றால் சரியல்ல. அந்த உயிலில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால் என்னுடைய தந்தையின் சித்தப்பாமகன ் தான ் உடன்இருந்து உயில்எழுதி கொடுத்தார். எனது தகப்பனாருக்கு இறக்கும்போது வயது 87ஆகும். எனது தந்தை இறப்பதற்கு 6 முதல் 7 ஆண்டுகளுக்கு முன்பே உடல் நலம் இன்றியும், சுயசிந்தனை இன்றியும் இருந்தார் என்றால் நல்ல மனநிலையில் இருந்தார். அவர் இறக்கும் வரை எந்தநோயும் இல்லாமல் இருந்தர் என்று சொல்கிறேனா என்றால் அவர் நன்றாக இருந்தார். அவர் உயில் ஏற்பட்டதாக சொல்லும் காலத்தில ் எந்த ஆவணத்தில ் எதற்காக கையொப்பம ் செய்கிறோம ் என்ற சிந்தனை இல்லாமல் இருந்தர் என்றால் சரியல்ல.

என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் பத்தி எண்.23ல் ஆறுமுக படையாச்சியின் வாரிசுகள் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொல்லியுள்ள விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆறுமுக படையாச்சியின் வாரிசுகள் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

அதேபோல் என்னுடைய பிரமாண வாக்க மூலம் பத்தி எண்.24ல் அய்யானர் படையாச்சி மக்களான 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரர் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொல்லியுள்ள விவரத்தை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். அய்யனார் படையாச்சியின் வாரிசுகள் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

தாவா முதல் அயிட்டம் மற்றும் 4ம் அயிட்ட சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் கணவர் முத்துசாமிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியலல். தாவா 3ம் அயிட்ட சொத்தில் 3ம் பிரதிவாதியின் கணவர் முத்துசாமிக்கு பேர்பாதி சொத்து தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

நான் தாவா பிராதை திருத்தல் மனுவில் சொல்லியுள்ள விவரங்களுக்கு மாறாக திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா பிராதில் வழக்கு சொத்துக்களின் மதிப்பீடு முறையாக

செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்த போது 4ல் ஒருபங்கு பாகம் கேட்டுள்ளேன். தற்போது வழக்கு திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 8ல் 3பங்கு பாகம் கேட்டுள்ளேன். திருத்தத்திற்கு பின்னர் தற்போது உள்ள பங்கு விகிதாச்சாரத்திற்கு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தி இருக்கவேண்டும் என்றும், நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சரியல்ல. தாவா 2ம் அயிட்ட சொத்தில் 3ம் பிரதிவாதியின் கணவருக்கு 4ல் ஒருபங்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவாவில் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- K. Sundaram

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.